பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 18உ (4-11-67) சனி   வெளியூர்: ஐப்பசி 19உ (5-11-67) ஞாயிறு [இதழ்: 118

ஷேக் அப்துல்லா நிராகரிப்பு

புதுடில்லி, நவ. 3—

தம்மைச் சந்தித்துப் பேச விரும்பிய பக்ஷி குலாம் முகமது கோரிக்கையை ஷேக் அப்துல்லா நிராகரித்துவிட்டார்!

இன்று மாலை டில்லியிலுள்ள ஒரு மசூதியில் தொழுகைக்காக வந்திருந்த ஷேக் அப்துல்லாவிடம் இச்சந்திப்புக்கு மத்திய அரசிடம் அனுமதி வாங்குவதாக பக்ஷி குலாம் கூறினர்.

இதற்குப் பதிலளித்த ஷேக் அப்துல்லா, 'எனது உறவினர்களைத் தவிர வேறு யாரையும் நான் சந்திக்க விரும்பவில்லை' என்று கூறிவிட்டார்.

காங்கிரசின் நச்சுப் பல்லை நீக்குவீர்!

நாட்டை நாசம் செய்தது போதும்— இனி இந்நிலைக்கு இடம் தரக்கூடாது!

'துப்பாக்கிக் குண்டாக' வாக்குச்சீட்டை மதியுங்கள்— 'தவறுக்கு இடந்தராதீர்'—இராஜாஜி வேண்டுகோள்

சென்னை, நவ. 4—

"கருகிவிட்ட சிறகுகள் மீண்டும் முளைக்க வேண்டும் என்பதற்காகக் காங்கிரசு, தென் சென்னை இடைத் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறது!

"இந்தத் தேர்தலில் உள்ள கேள்வி, 'மறுபடியும் காங்கிரசுக்குப் பலம் கொடுக்கலாமா' என்பதுதான்! இந்த நாட்டில் 20 ஆண்டுகளாகக் காங்கிரசு நிர்வாகம் நடைபெற்றது; இந்த 20 ஆண்டு நிர்வாகத்தினல் மக்கள், பசி—தொல்லை என்ற நிலையில்தான் இருக்கிருர்கள்!

"20 ஆண்டு ஆட்சியில் காங்கிரசுக்காரர்கள், நாட்டை நாசம் செய்துவிட்டார்கள்! தங்களால் முடியாத காரியங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு பெரிய பெரிய திட்டங்களைப் போட்டார்கள்! 'உடனேயே அமெரிக்காவைப் போலவும், இங்கிலாந்தைப் போலவும் ஆகிவிட வேண்டும்' என்று ஆசைப்பட்டார்கள்! அதனல், நாட்டிற்குக் கடன் சுமை ஏறிவிட்டது! காங்கிரசின் தவருன கொள்கைகளினல் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது! இந்த நிலையில், மறுபடியும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவது பைத்தியக்காரத்தனமாகும்!"

இவ்வாறு, சுதந்தராக் கட்சித் தலைவர் இராஜாஜி அவர்கள், நேற்று மயிலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அறிஞர் அண்ணா அவர்களும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் விளக்கியதாவது:—

"நமக்கு வேண்டியது நல்ல அரசாட்சி—நல்ல நிர்வாகம்! இதற்கு எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, மத்தியில்—காங்கிரசை அதிகாரத்திலிருந்து இறக்க வேண்டும்! இது ஒரு நாள் நிறைவேறும்!

பிரிட்டிஷ்காரன் கடைசியில் இந்தியாவை விட்டு வெளியேறும்போது, நண்பனுகவே போனதுபோல், காங்கிரசுக் கட்சி மற்ற கட்சிகளுடன் நட்புடன் இருந்து ஆட்சிலிருந்து போகவேண்டும்; ஆனல் அந்த எண்ணம், அவர்களுக்கு இல்லை!

காங்கிரசுக்கு இருக்கும் நச்சுப் பல்லைப் பிடுங்கிவிட்டுத்தான் அதனுடன் பழக வேண்டும்! நச்சுப் பல் இருந்தால் மறுபடியும் திங்கு நேரிடும்!

தமிழ் நாட்டின் நிர்வாகத்தைப் பற்றி யாரோ சொல்வதைக் கேட்டு ஏமாந்து, தேர்தலில் தவருன காரியத்தைச் செய்துவிடாதீர்கள்!

வாக்குச் சீட்டை துப்பாக்கிக் குண்டாக நினைத்துக் கொண்டு போடுங்கள்! இது டில்லிக்குப் போகவேண்டிய குண்டு! தூரத்திலிருந்து சுடுகின்ற இந்தக் குண்டு, நேராக டில்லிக்குப் போகவேண்டும்!

குளத்தில் எருமை இறங்கி கலக்கிவிட்டதால், அந்தத் தண்ணீரை எடுத்துக் குடிக்க முடியுமா? 20 ஆண்டுகளாகக் கலங்கிய குளத்தை 8 மாதத்திற்குள் தெளிய வைக்க முடியுமா? இருந்தாலும், அண்ணாவின் நிர்வாகத்தைப் பற்றி இந்தியா முழுவதிலும் நன்ருகப் பேசப்படுகிறது!

ஆட்சியிலிருக்கப் பயந்து அண்ணா விலகிவிடுவார் என்று காங்கிரசுக்காரர்கள் நினைத்தார்கள்; ஆனல் அதற்கு நேர் மாருக அவருடைய ஆட்சி, இந்தியா முழுமையிலும் பிரசித்தி பெற்றுவிட்டது!

காங்கிரசுக்கு மீண்டும் வாழ்வளிக்க முனையாதீர்!

"இப்போது நடக்கும் தேர்தல், நாடாளுமன்றத்துக்கு ஆகும். 'ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க நாம் விரும்புகிருேம்' என்பதை எடுத்துக்காட்ட—'இந்தி ஆதிக்கத்துக்கு உட்படமாட்டோம்' என்பதை மெய்ப்பித்திட—'வீழ்ந்த காங்கிரசுக்கு மீண்டும் வாழ்வளிக்கமாட்டோம்' என்பதைத் தெளிவுறுத்த—மாறனை ஆதரித்து வாக்களியுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

"காங்கிரசு எதேச்சாதிகாரம் மீண்டும் தலைதூக்கவிடாமல் விழிப்புடன் இருக்கிருேம் என்பதை, இத்தேர்தலின் மூலம் எடுத்துக்காட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

—அறிஞர் அண்ணா
(மயிலைக் கூட்டத்தில்)

காலம் மாறிவிட்டது— காங்கிரசுக்காரர்களே உணருவீர்!

புள்ளிவிவரங்களே உங்களைக் காட்டிக் கொடுத்துவிடும்— அமைச்சர் மு. கருணநிதி எச்சரிக்கை — விளக்கம்

சென்னை, நவ. 4—

"அடிப்படையே இல்லாமல், 'பொய்யை ஒரு முறைக்கு இருமுறை சொன்னல் மெய் ஆகும்' என்ற பிரச்சார முறையை கைக்கொண்டு காங்கிரசுக்காரர்கள், இப்போது சில சுவரொட்டிகளைப் போட்டு வருகிருர்கள்; அதில் ஒரு சுவரொட்டி, காங்கிரசு எம்.எல்.ஏ., ஜெயராஜ் வெட்டப்பட்டது பற்றிய சுவரொட்டி!

"நண்பர் ஜெயராஜ் அவர்கள் வெட்டப்பட்டபோது, நாங்கள் அந்தப் பலாத்கார முயற்சிக்கு கடும் கண்டனம் தெரிவித்தோம்! ஜெயராஜைக் கண்டோம்—கண்ணீர் விட்டோம்! ஆறுதல் கூறினேம்!

"வெட்டப்பட்ட ஜெயராஜ் அவர்கள், 'யார் தன்னை தாக்கியதாக'க் கூறினரோ அவர்களையெல்லாம் அண்ணாவின் ஆட்சி கைது செய்தது; குற்றவாளிக் கூண்டில் குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிருர்கள்; விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சொந்தக் காரணமாக நடைபெற்ற அந்தச் சம்பவத்திற்கு அரசியல் சாயம் பூச காங்கிரசுக்காரர்கள் முயலுகிருர்கள்!"

இவ்வாறு அமைச்சர் மு. கருணநிதி அவர்கள், சென்னை 62-வது வட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினர். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"காங்கிரசுக்காரர்களை அறைகூவி அழைக்கிறேன்—'ஜெயராஜ் எம்.எல்.ஏ. வெட்டப்பட்ட வழக்கிலுள்ள குற்றவாளிகள், தி. மு. கழகத்தின் உறுப்பினர்கள்' என்று காங்கிரசார் நிரூபிப்பார்களேயானல், நீங்கள் சொல்லுகின்ற எதற்கும் கட்டுப்படத் தயாராக இருக்கிறேன்.

நிலைமை இப்படி இருக்கும்போது, ஜெயராஜ் வெட்டப்பட்ட சம்பவத்திற்கு அரசியல் வண்ணம் பூசப் புறப்பட்டிருக்கிருர்கள் காங்கிரசுக்காரர்கள்!

இந்தச் சம்பவத்தை மட்டுமல்ல—தமிழ்நாட்டில் இப்போது எங்கு கொலைவிழுந்தாலும், கொள்ளை நடைபெற்ருலும், திருட்டு நடைபெற்ருலும், காங்கிரசுக்காரர்கள், 'பார், பார்; தி.மு.க. ஆட்சியில் சட்டம் இல்லை—அமைதி இல்லை—அவர்களுக்கு ஆளத் தெரியவில்லை' என்று கூக்குரல் கிளப்புகிருர்கள்!

ஏதோ இவர்கள் ஆட்சியில் கொலையே விழாததுபோலவும், விழுந்ததெல்லாம் பனங்குலை—தென்னங்குலை என்பதுபோலவும், தி. மு. கழக ஆட்சியில் விழுந்ததுதான் உயிர்க் கொலை என்பது போலவும் பேசிவருகிருர்கள்!

கொலைகள் விழுவதால்—கொள்ளைகள் நடப்பதால்—தெருச் சண்டை, வாய்க்கால் - வரப்புச் சண்டை நடப்பதால், 'சட்டம் கெட்டுவிட்டது — அமைதி குலைந்துவிட்டது—ஆளத் தெரியவில்லை' என்பது உண்மையானல், காங்கிரசுக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன்—இதோ என் கையில் இருப்பது 1961-62-63-64 ஆகிய ஆண்டுகளின் போலீசுத்துறை நிர்வாக அறிக்கை—இந்த ஆண்டுகளில் நடைபெற்ற கொலைகளின் விவரம் இதோ:—

கொலை—1961-ல் 727; 1962-ல் 659; 63-ல் 661.

கொள்ளை—1961-ல் 32; 62-ல் 36; 63-ல் 22.

(1-ம் பத்தி பார்க்க)

அமைச்சர் மு. கருணநிதி விளக்கம்—எச்சரிக்கை

(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

வழிப்பறி—1961-ல் 191; 62-ல் 169; 63-ல் 125.

வீடு புகுந்து திருட்டு—1961-ல் 6,703; 1962-ல் 6,221; 1963-ல் 6,182.

கால்நடைத் திருட்டு—1961-ல் 2,002; 1962-ல் 1909; 1963-ல் 6,122.

சாதாரணத் திருட்டு—1961-ல் 18,944; 1962-ல் 17,019; 1963-ல் 16,470.

இவை எல்லாம் காமராசர் ஆண்டபோது ஏற்பட்ட குற்றங்களின் பட்டியல்!

பக்தவத்சலம் 'பட்டாபிஷேகம்' செய்துகொண்ட 1964-ல் நடைபெற்ற கொலை 761; கொள்ளை 33; வழிப்பறி 119; வீடுபுகுந்து திருடுதல் 6,786; கால்நடை திருட்டு 1,826; சாதாரணத் திருட்டு 17,089.

இப்போது என்ன பதில் கூறுகிறீர்கள்,—காங்கிரசுக்காரர்களே!

ஏதோ தனிப்பட்ட காரணங்களால் நடைபெற்ற ஒரு கொலைக்கு—சண்டைக்கு, 'சட்டம் போயிற்று; அமைதி போயிற்று' என்று கூக்குரலிடும் காங்கிரசுக்காரர்களே! இத்தனைக் கொலைகள், கொள்ளைகள் நடைபெற்றதேன்—என்ன பதில்?

'சட்டம் போயிற்று' என்று புலம்பும் காங்கிரசுக்காரர்களே! சட்டம் இதுவரையில் உங்கள் கைகளில் இருந்தது—இப்போது அது போய்விட்டது!

என்ன செய்வது? காலம் மாறிவிட்டது—காங்கிரசுக்காரர்களே! உணர்ந்து கொள்ளுங்கள்!"

வள்ளுவர் படம்

அமைச்சர் கருணநிதி உத்தரவு

சென்னை, நவ. 3—

பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் கார் விபத்துக்குப் பின் உடல்நலம் தேறி இன்று தலைமைச் செயலகம் வந்து பணியாற்றினர்.

தமது முதல் பணியாக அவர், பொதுப் பணித்துறை — நெடுஞ்சாலைத்துறை அலுவலகங்களிலும் பயணிகள் விடுதிகளிலும், போக்குவரத்துத்துறைப் பணிமனைகளிலும் திருவள்ளுவர் படம் வைக்கும் படியும், அப்படத்தின்கீழ், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்—எய்துவர் எய்தாப் பழி' என்னும் குறளை பொறிக்கும் படியும் ஆணையிட்டார்.

இருக்கின்ற மூன்று நாட்களில்!

"ஒரு ரூபாய்க்குப் படி அரிசி போட்டோம்; கூவம் ஆற்றைச் சீர்திருத்தத் திட்டம் போட்டிருக்கிறோம்; காவிரி ஆற்று நீரைக் கொண்டுவரத் திட்டம் துவக்கியிருக்கிறோம்; இவையெல்லாம் நீடித்து வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால், நவ. 7-ல் தி.மு. கழகம் வெற்றி பெற வேண்டும்.

"சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டேன். இன்னும் இருப்பது மூன்று நாட்கள்தான்!

"ஆகவே இருக்கக்கூடிய நாட்களில் ஊழியர்கள் விடுவிடாகச் சென்று ஓட்டுக் கேட்க வேண்டும்."

--அறிஞர் அண்ணா

94,000 டன் கொள்முதல்

தஞ்சை, நவ. 3—

தமிழக அரசின் உணவுக்கொள்முதல் திட்டத்தின்கீழ் இதுவரை 94,000 டன் அரிசி தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ரங்கபாஷ்யம், நிருபர்களிடம் தெரிவித்தார்.

சென்னை நகரம் உள்ளிட்ட பற்றுக்குறை மாவட்டங்களுக்கு இந்தக் குறுவை அறுவடையில் 62,000 டன் அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது.

விலையை ஏற்றியது யார்?

"விலைகள் எல்லாவற்றையும் அவர்கள் (காங்கிரசார்) ஏற்றிவிட்டுவிட்டார்கள்!

"ஒரே வாரத்தில் 90 கோடி ரூபாய்க்கு டில்லி அரசு நோட்டடித்ததால் விலை ஏறிவிட்டது!

"நோட்டு அச்சடிக்க இரண்டு பேருக்குத்தான் அதிகாரம் உண்டு; அதாவது, ஒன்று—டில்லி அரசு; மற்றொருவர்—துணிந்த பேர்வழி! எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை!

"டில்லியில் உள்ள எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, சில காங்கிரசுக்காரர்களுக்கு அமைச்சர் பதவி கொடுப்பதாகக் கூறினால், பதினைந்தே நாட்களில் அங்கே எதிர்க் கட்சி ஆட்சி ஏற்பட்டுவிடும்; அதற்குத் தயாராக அங்கே சில காங்கிரசுக்காரர்கள் இருக்கிறார்கள்!

"இதை நான் சொல்லக் கூடாது என்று இருந்தேன்; ஏனென்றால், 'இந்திரா காந்தியின் அமைச்சரவை இருக்க வேண்டும்' என்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவர்."

--அறிஞர் அண்ணா

(அமைந்தகரை கூட்டத்தில்)

காங்கிரசு தோற்க வேண்டியதேன்?--

கருணாநிதி தரும் விளக்கம்

"தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தது; அதற்காக, உணவுத் தானிய உற்பத்தியில் விவசாய அமைச்சரின் ஆர்வத்தாலும், உணவு அமைச்சர் மதியழகன் அவர்களின் பேராற்றலாலும் உணவுத் தானிய உற்பத்தி அமோகமாகப் பெருகியது.

"ஆனால், காமராசர் உட்பட காங்கிரசுக்காரர்கள் கேட்கிறார்கள்—'உணவு உற்பத்தி என்பது நாங்கள் போட்ட திட்டம்தானே? நீ என்ன புதிதாகச் செய்வது?' என்று! இன்னும் கொஞ்சம் அந்த வாதத்தை நீட்டி, 'வயல்களையே நாங்கள் தானய்யா அமைத்தோம்' என்று கேட்டாலும் கேட்பார்கள்!

"அவர்கள்தான் அந்தத் திட்டத்தை அமைத்தவர்கள் என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டு திருப்பிக் கேட்கிறேன்—அவர்கள் ஆரம்பித்த காரியத்தை நாங்கள் கெடுத்திருந்தால், அவர்கள் குற்றஞ்சாட்டுவது பொருத்தமுடையதாயிருக்கலாம்; ஆனால், அவர்கள் ஆரம்பித்த காரியத்தை நல்ல முறையில் நிறைவேற்றி, அவர்கள் செய்ய முடியாத காரியத்தையும் செய்திருக்கிறோமே—எங்களை அவர்கள் பாராட்ட அல்லவா வேண்டும்? அதற்குப் பதிலாக், கண்டிக்கிறார்களே—இது பொருத்தமுடையதுதானா?

"நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், தமிழ்நாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கும் தீர்மானம் கொண்டுவந்தோம்! 'மெட்ராஸ் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்' என்பதை மாற்றி, 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று பெயரிட்டோம்! 'ஸ்ரீ, ஸ்ரீமதி' என்பதை 'திரு., திருமதி' என்று மாற்றினோம்! அரசாங்க முத்திரைக்குக் கீழே இருந்த 'சத்தியமேவ ஜெயதே' என்ற வடமொழியை மாற்றி, 'வாய்மையே வெல்லும்' என்று ஆக்கினோம்! பஸ்களில் வள்ளுவர் உருவப் படத்தை வைத்துத் திருக்குறளையும் எழுதிவைத்தோம்! சென்னைக் கோட்டையில், 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்ற ஒளியுமிழ்ப் பெயர்ப் பலகை அமைத்தோம்!

"இதோ இங்கு ஒட்டப்பட்டிருக்கும் இரண்டு சுவரொட்டிகளைக் காணுங்கள்; ஒன்று—தி.மு. கழகச் சுவரொட்டி; அதில், 'தி.மு.க. வேட்பாளர் முரசொலி மாறன்' என்று எழுதப்பட்டிருக்கிறது! இன்னொன்று—காங்கிரசுக் கட்சிச் சுவரொட்டி; அதில், 'காங்கிரசுக் கட்சி வேட்பாளர் சி. ஆர். இராமசாமி' என்று எழுதப்பட்டிருக்கிறது! முந்தைய தேர்தலில் காங்கிரசுச் சுவரொட்டிகளில் 'வேட்பாளர்' இருக்காது; 'அபேட்சகர்'தான் இருக்கும்!

"அந்த 'அபேட்சகர்'—'வேட்பாளர்' ஆனதற்குக் காரணம் என்ன? பொதுத் தேர்தலில், காங்கிரசுக்குத் தமிழ் உணர்வுள்ள மக்கள் தந்த தோல்விதான்!

"இப்போதுகூட நமது சுவரொட்டியில், 'நாடாளுமன்ற இடைத் தேர்தல்' என்று இருக்கிறது; அவர்கள் சுவரொட்டியில் 'உப தேர்தல்' என்றுதான் இருக்கிறது!

"இந்த இடைத் தேர்தலிலும் காங்கிரசுக்குத் தோல்வியைத் தந்தால், 'உப தேர்தல்', 'இடைத் தேர்தல்' ஆக மாறும்! ஆகவே, காங்கிரசுக்குத் தமிழ் உணர்வு ஏற்படுத்த அவர்களுக்குத் தோல்வியைத் தாருங்கள்! கழகத்திற்கு வெற்றியைத் தாருங்கள்!"

—(புரசைப் பொதுக்கூட்டத்தில்)

வேளாண்மை அமைச்சருடன் இரண்டு நாட்கள்!

வழக்கறிஞர்
தில்லை வில்லாளன்

தமிழகத்தில், கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிட மக்கள் கட்டளையிட்டனர்! கட்டளையை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள், ஒன்பது பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்து—ஆட்சித் தேரில் ஏறி அமர்ந்து நடத்திடத் தொடங்கினார்!

ஒன்பது பேரில், தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த தோழர் ஏ. கோவிந்தசாமியும் ஒருவரானார் என்பது கண்டு மட்டிலா மகிழ்ச்சியுற்றேன்.

நம்மவர்கள் அமைச்சர்களாக அமர்ந்து பணியாற்றும் பாங்கினை உடனிருந்து காண வேண்டும் என்ற பேரவா என்னைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது; காரணம், அவர்கள் வெவ்வேறு பொறுப்புக்களை ஏற்றுப் பணி புரிந்ததை அருகில் இருந்து கண்டு வியந்து மகிழ்ந்தவன்; அதுவும், நான் எழுத்தாளன் அல்லவா—அந்த ஆசை எழுவது இயற்கைதானே!

அமைச்சர் மாண்புமிகு திரு, கோவிந்தசாமி அவர்களிடம் அறிஞர் அண்ணா ஒப்படைத்துள்ள பொறுப்பு மிகவும் முக்கியமானது—மிகப் பரந்த நிலையில் உள்ளது.

இந்த நாடே, 'விவசாய நாடு' என்றுதான் பெயர் பெற்றது. அந்த விவசாயம், அவர் பொறுப்பில்! காடுகள் நிறைந்தது இந்நாடு—காட்டிலாகா அவர் பார்வையில்! மீன் வளம் அவரிடம்! இப்படி அவருடைய இலாகாக்கள், இந்நாட்டு உணவு நிலைக்கு அடிப்படையானவை! இந்த இலாகா பொறுப்புக்களை அவர் எவ்வளவு திறம்பட நிர்வகிக்கிறார் என்பதை நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது!

கடந்த அக். 25, 26 ஆகிய இரண்டு நாட்களிலும், தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் சுற்றிவந்தார் அமைச்சர்; நான் உடனிருந்தேன்.

கழக அமைச்சர்களுக்கும்–காங்கிரசு அமைச்சர்களுக்கும் உள்ள வேறுபாடு, அவர்களிடையே மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளும் ஈடுபாடுதான்.

அமைச்சர் கோவிந்தசாமியிடம் அமைந்துள்ள சிறந்த பண்பு என்னவென்றால், அவர் மக்களில் ஒருவராக மாறிவிடுகிறார் என்பதுதான்! அதனை வருவோர் கண்டு மகிழ்ந்திடுகின்றனர்!

25–10–67 காலை 10 மணி; திண்டிவனம் பிரயாணிகள் விடுதியில் அமைச்சர் அமர்ந்திருந்தார்; அருகில், தோழர்கள் தங்கவேல், பக்கிரிசாமி, இராமானுசம், நடராசன், வழக்கறிஞர் பாலன் ஆகியோர் அமர்ந்திருந்தனர். தென் சென்னை வெற்றிக்குத் தங்கள் பங்கு பற்றி விவாதித்தார்கள்.

அதற்குள், அதிகாரிகள் வந்தார்கள்; துணைக் கோட்டாட்சித் தலைவர், தாசில்தார் ஆகியோரிடம் புயல் பாதிப்புக்குப் பிறகு உள்ள நிலைமைகளை அமைச்சர் கேட்டறிந்தார். அதற்குள், மார்க்கெட்டிங் சொசைட்டித் தலைவர்—செயலாளர் ஆகியோர் வந்தார்கள்; சொசைட்டிக்கு வரும்படி அமைச்சரை அழைத்தனர்.

அவர்களை முன்கூட்டி அனுப்பிவிட்டு அமைச்சர் கழகத் தோழர்களிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்; தோழர் தங்கவேல் உடன் வந்தார்.

அங்கே மணிலா வியாபாரிகள் கூட்டம்—வழியில் இரு பிரிவாக நின்று அமைச்சரை வரவேற்றனர். சொசைட்டி நிர்வாகிகளைச் சந்தித்துவிட்டு, மணிலா மூட்டைகள் வைத்துள்ள களத்திற்கு நேரில் சென்றார். மணிலாவைக் கொண்டுவந்து விற்கும் விவசாயிகளை, தங்கள் குறைகளை நேரில் கூறும்படிக் கேட்டார்; வானிலிருந்து பூச்சி மருந்து தெளிப்பதால் ஏற்பட்டுள்ள நன்மை பற்றி அவர்களிடம் விசாரித்தார்; அவர்கள் அனைவரும் 'இது நல்ல பயனுள்ள முறை' என்று கூறினர். மேலும் அவர்கள், 'தங்களுக்கு சொசைட்டியிலிருந்து பணம் மாலை 4 மணிக்குள் கிடைத்தால் நல்லது' என்று குறிப்பிட்டார்கள்; அப்பொழுது அமைச்சர் சிரித்துக்கொண்டே, குறிப்பிட்டார்—'இதிலுள்ள சிரமம் எனக்குத் தெரியும்; கணக்கிடும் எழுத்தர் ஒருவர் இருப்பார்; அவரிடம் எல்லோரும் குழுமிக்கொண்டு 'எனக்கு முன்னால்–எனக்கு முன்னால்' என்பர்; அவர் எதுவும் செய்ய முடியாமல் தவிப்பார்; எனக்கு நேரடி அனுபவம்' என்று! ஆம்; கொஞ்ச காலம் அவர் இத்தகைய சொசைட்டியில் எழுத்தராக இருந்திருக்கிறார்!

செஞ்சிக்கு அழைத்துச்செல்ல சட்டமன்ற உறுப்பினரும் வழக்கறிஞருமான தோழர் முனுசாமி அங்கேயே வந்துவிட்டார்; சொசைட்டியில் கூடியிருந்தவர்களிடம் விடை பெற்று, செஞ்சி பிரயாணிகள் தங்கும் விடுதிக்கு நேராகச் சென்றார்.

அங்கு, கோட்டாட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும், பொதுமக்களும், நண்பர்களும் நல்வரவேற்பு தந்தனர்.

அப்பகுதியிலுள்ள ஒன்றியத் தலைவர், அங்கு, எரு விநியோகத்திலுள்ள நிலைமையை எடுத்துக் கூறினார்.

உழுவதற்கு வந்துள்ள புதிய இயந்திரம் பற்றி அமைச்சர் எடுத்து விளக்கி, 'அதனை வாங்கிப் பரீட்சை செய்யலாம்' என்றார்.

'காட்டுப் பகுதி நிலங்களில் பயிரிட நிலம் தர வேண்டும்' என்று விவசாயிகள் சிலர் விண்ணப்பம் தந்தனர்! அந்த விவசாயிகளை நேரில் அழைத்து, 'நானே அடுத்த தடவை பார்வையிட்டு, விவசாயத்திற்கு கொடுக்கக்கூடிய இடம் என்றால், உடனடியாகத் தர ஏற்பாடு செய்கிறேன்' என்று கூறியது கேட்டு, அவர்கள் மகிழ்ந்தனர்.

விண்ணப்பங்கள் குவிந்தன; தனி உதவியாளர் தர்மலிங்கம், அவைகளை அங்கங்கே படித்துக் குறிப்புக்கள் எழுதிவிட்டார். அவைகளை உடனுக்குடன் கவனிக்கச் சொல்லி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அங்கேயே அனுப்பிவிட அமைச்சர் உத்தரவிட்டார்.

பிறகு, விழுப்புரம் பிரயாணிகள் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். மாவட்டச் செயலாளர் சாம்பசிவம் அமைச்சரைக் கண்டு, குறிஞ்சிப்பாடி பொதுக்கூட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருப்பதால், தாம் வர இயலவில்லை என்றுகூறி, விழுப்புரத்திலிருந்து குறிஞ்சிப்பாடிக்குத் திரும்பிச் சென்றார். விழுப்புரம் நகரச் செயலாளர் வேங்கைமார்பன், வட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, சண்முகம் எம்.எல்.ஏ. ஆகியோரும், மற்றும் கழகத் தோழர்கள் பலரும், அமைச்சருடன் கலந்து உரையாடினர்.

அமைச்சருக்கு நேரடியாகத் தொடர்புள்ள தொகுதியானதால், ஏராளமான கழகத் தோழர்களும், தொகுதி மக்களும் கூடியிருந்தனர்; மாற்றுக் கட்சி தோழர்களும் வந்திருந்தனர். அவர்களோடு, வெளிப்படையாக மனம்விட்டு விவாதித்தது, அருமையாக இருந்தது. வளவனூர் பகுதியில், கழக ஆட்சியினால்தான் ஏரிக்குத் தண்ணீர் இல்லை என்று கிளப்பிவிட்ட அவதூறை எடுத்துக் கூறி விளக்கிய பாங்கு, பொருத்தமாக இருந்தது.

இப்படி அவர், அவர்களில் ஒருவராகிவிடுவதாலேயே எல்லோரும் விரும்பி வரவேற்கின்றனர்!

விழுப்புரத்தில் கழகத் தோழர்கள் அளித்த சிற்றுண்டியை அருந்திவிட்டு, திருக்கோயிலூர் பயணிகள் விடுதியை அடைந்தோம்; அங்கு வட்டச் செயலாளர் சுப்பிரமணியம், கீர்த்தி, குமாரசாமி ஆகிய கழக நண்பர்களும், மற்றும் பலரும் வரவேற்றனர்.

கள்ளக்குறிச்சியிலிருந்து தோழர்கள் கேசவலு எம்.எல்.ஏ., பச்சையப்பன் எம்.எல்.ஏ., மாரியப்பன், நெடுமாறன், வாசுதேவன், இராமகிருஷ்ணன், ரகுராமன், மற்றும் பலரும் வந்திருந்தனர். அவர்களுடன் சிறிதுநேரம் உரையாடிவிட்டு, இளவரசனூர்கோட்டை சென்றோம்; அங்கு என் தலைமையில் அமைச்சர், மின்விளக்கை ஏற்றிவைத்தார்.

மின்சார வசதிக் குறைவு பற்றி அங்கே கொடுத்த மனுக்களை அங்கு வந்திருந்த அதிகாரியிடம் நேரில் கொடுத்து, ஆவன செய்ய உத்தரவிட்டார்.

பிறகு, கள்ளக்குறிச்சி பஞ்சாயத்து வரவேற்பை ஏற்றுக்கொண்டார். பின்னர் சோமாந்தர்குடி, தெங்கியாநத்தம் ஆகிய இரண்டு இடங்களில் மின்விளக்கை ஏற்றிவைத்தார்.

இதற்குள் இரவு 12-மணியாகிவிட்டது. பிறகு கள்ளக்குறிச்சி விடுதிக்கு வந்தோம்; சிற்றுண்டிதான் கிடைத்தது; அருந்தினோம்.

இரவு 3-மணிவரை விண்ணப்பம் தருவோர், குறைகூறுவோர்—இப்படி ஒரே கூட்டம்; அவரவர் கூறும் குறைகளைக் கேட்டுச் சலிக்காமல் பதில் கூறி அனுப்பிவைத்தார்.

அதன் பிறகு கழகத் தோழர்கள் கூடினர்; பல பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர். நகரப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. கோவிந்தராசுலு அவர்களின் 'இரக்கம்', எங்களை அதன் பிறகு தூங்கவிட்டது!

காலை மலர்ந்து அமைச்சர் எழக்கூடவில்லை; அதற்குள் பொதுமக்கள் விண்ணப்பங்களுடன் வந்துவிட்டனர். விழித்தவுடன் எந்தவிதச் சலிப்புமின்றி அவைகளைப் பெற்றுக்கொண்டு, பிறகே காலைக் கடன்களை நிறைவேற்றி விருத்தாசலம் புறப்பட்டார்.

விருத்தாசலம் விடுதிக்கு 26–10–67 காலை 10-மணிக்கு வந்துசேர்ந்தோம்; அங்கு அதிகாரிகளைச் சந்தித்து, கார்மாங்குடியில் உள்ள காட்டு நிலங்களைப் பார்வையிட்டார்.

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னைக்குக் காவிரி நீரைக் கொணரும் திட்டம்

முதலமைச்சர் அண்ணா - பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி தரும் விளக்கம்

சென்னைக்குக் காவிரி நீரைக் கொண்டுவரும் திட்டத்தைத் துவக்கிவைத்தபோது முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திட்டத்தை விளக்கிக் கூறியதாவது:—

"இங்கரில் 7—8 இலட்சம் மக்கள் வாழ்ந்த காலத்தில் அமைந்த குடிநீர்த் திட்டமே இப்போதுள்ளது. இப்போது 22 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். முன்பு போட்ட திட்டம், இப்போது போதுமானதாக இல்லை.

ஆறுகள் பலவற்றிலிருந்து நீர் பெறுவதற்கு ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். மொத்த மாகச் சொல்வதானால், சங்கையோடு எல்லா ஆறுகளையும் இணைக்க வேண்டுமென்று கவிஞர்கள் மட்டுமல்லாமல்—பொறியியலாளரும் வலியுறுத்தி வந்துள்ளனர். 'அது நிறைவேற எத்தனை ஆண்டுகள் ஆகுமோ' என்றிருந்ததால், வேறு பல திட்டங்களைப் பற்றி ஆராய்ந்தனர். கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம் ஆராயப் பட்டது; அதிலிருந்த சிக்கல் காரணமாக அதையும் நிறுத்தினர்.

காவிரியிலிருந்து நீர் கொண்டுவரும் திட்டங்களிலேயே—ஜேடர்பாளையத்திலிருந்து நீர் கொண்டுவரும் திட்டம் பற்றி முதலில் குறிப்பிட்டார்கள். ஜேடர்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதென்றால், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நான்காயிரம் ஏக்கர் நன்செய்யையும் மூன்றாயிரம் ஏக்கர் புன்செய்யையும் பெருஞ் செலவில் விலைக்கு வாங்க வேண்டி இருந்திருக்கும். அப்படியே வாங்குவதென்றாலும், 'பத்தாயிரம் கொடு—பதினைந்தாயிரம் கொடு' என்று சிலர் கேட்கக்கூடும்; இன்னும் சிலர் நீதிமன்றம் சென்று வழக்கைத் வீண் தாமதத்தை உண்டாக்கியிருப்பார்கள்!

வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைக் கொண்டுவரும் திட்டம் எல்லோராலும் ஒருமித்த கருத்தோடு ஆதரிக்கப்படுகிற திட்டமாக உள்ளது.

சுகாதாரமான வாழ்க்கைக்கு ஒவ்வொருவருக்கும் 40 காலன் தண்ணீராவது கிடைக்க வேண்டும்' என்கிறார்கள். சென்னை நகரில் இப்போது கிடைப்பது தலைக்கு பத்து காலன்தான்! பம்பாயிலும், கல்கத்தாவிலும் 60—70 காலன்கள் வரை கிடைக்கிறது! அந்த அளவுக்கு முடியவில்லையென்றாலும், நாம், 'தலைக்கு 40 காலன்' என்ற அளவையாவது அடைந்தாக வேண்டும்.

மேட்டூரிலிருந்து வருகிற நீரைத் தாங்குகிற ஒரு பாத்திரமே வீராணம் ஏரி; எவ்வளவு தேவையோ அவ்வளவு தண்ணீரை அந்தப் பாத்திரத்துக்குள் விட்டு அதை எடுத்துக் கொள்வோம்; சென்னை நகரத் தேவைக்காக நாம் எடுக்கும் தண்ணீரின் அளவு, அங்கு விவசாயததுக்காகப் பயன்படுவதில் 100-ல் ஒரு பங்காகும்.

விவசாயத்துக்குத் தண்ணீர் போதுமா போதாதா என்பதை, விவசாயிகளைக் காட்டிலும்—விவசாயத்தோடு தொடர்பில்லாதவர்களே அந்த விசாரத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

பாத்திரமாக விளங்கும் வீராணம் ஏரியில் தண்ணீரின் அளவு குறையாமல் இருக்க பொறியியலாளர், தக்க ஏற்பாடுகளை மேற்கொள்வர். 139 மைல் தூரம் தண்ணீர் கொண்டுவரப்பட இருக்கும் இந்தத் திட்டத்தின் சிறப்பு, இதன் சிக்கனம் ஆகும்.

வழி நெடுக சிற்றூர்களும், பேரூர்களும் அமைந்துள்ளன; பொதுவாக இத்தகைய திட்டங்களில், நில ஆர்ஜிதம் ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கும்; அந்த சிக்கலெல்லாம் இந்தத் திட்டத்தில் இல்லை."

மு. கருணாநிதி

திட்டத்தை விளக்கிப் பொதுப்பணித்துறை யமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கூறியதாவது:—

"நம்முடைய நிதி நிலைக்கும்—நம்முடைய தற்போதைய கூடுதல் தேவைக்கும்—நாம் உடனடியாகச் செயல்படக்கூடிய முறைக்கும், ஏற்ற ஒரு திட்டம் இப்பொழுது தொடங்கும் திட்டம்!

இப்பொழுது வழங்கப் பெறும் 350 இலட்சம் காலன்கள் எனிதில் இத்திட்டத்தால் இரட்டிக்கும். நம்மை எதிர்நோக்கி நிற்கும் ஒரு சில ஆண்டுகளுக்கு இத்திட்டத்தால் பயனளிக்கமுடியும். அதற்கும் மிஞ்சிய தேவைகளை ஈடுசெய்ய கிருஷ்ணா, கோதாவரி முதலிய ஆறுகளை நோக்கித்தான் விழைதல் வேண்டும்.

வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதால் ஏற்கனவே அந்த ஏரியின்கீழ் நடைபெறும் பாசனத்துக்கு ஊறு ஏற்படுமோ என்ற அச்சம் சில நாட்களுக்குமுன் தெரிவிக்கப்பட்டது. இதனை நான் ஏற்கனவே சட்டமன்றப் பேரவையில் விளக்கியுள்ளேன். வீராணம் ஏரியிலிருந்து பாசன நீரை நாம் சென்னை நகருக்குக் கொண்டுவரப் போவதில்லை. அந்த அளவுக்குத் தண்ணீரும் அந்த ஏரியில் நமக்குக் கிட்டாது. வீராணம் ஏரி, காவிரி பாசனத் தொடரில் ஒரு கூறு. அது ஒரு பாத்திரம்போல் பெரிய நிலையிலிருந்து அள்ளி எடுக்க உதவும் ஒரு வசதி.

நீரை வீராணம் ஏரியின் வழி செலுத்தி—மின்விசை இறைவைகளால் ஏற்றி—குழாய்கள் மூலமாக சென்னைக்குக் கொண்டுவர ஏற்பாடு. குடிநீர்த் தேவையை பாசனத் தேவைக்கு மேல் உள்ள நிலைகளிலிருந்தும் அளவிலிருந்தும் மட்டுமே சென்னைக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். பாசன மட்டங்கள் ஒவ்வொரு மதகிலும் அந்தந்தக் காலத் தேவைகளுக்கேற்பக் காத்துத் தேக்கிய பின்னரே, குடிநீர் இறைவை தொடங்கும்.

எனவே, இப்பொழுது உள்ள வீராணம் ஏரிப் பாசனம், எந்த விதத்திலும் பாதிக்கப் பெருது என்று ஐயமற உறுதிகூற நான் விழைகின்றேன். இருப்பினும், ஏரிகளில் தேவையான மராமத்துக்கள்—பாசன சீரமைப்பு—தண்ணீர் ஏறிப் பாய்வதற்கான கால் அமைப்புக்கள்—தூர்எடுப்பது—இவற்றின் தேவையை அரசினர் நன்கு ஆய்ந்து தக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பாசன முறை இப்பொழுது உள்ளதைவிட இன்னும் நன்கு அமைய செயற்குறிப்புகள் தயாரிக்கப் பணித்துள்ளனர். குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ளும் இத்தருணத்தில் பாசன வசதிக்குப் பிறக்கும் நல்ல காலத்தை, நான் இங்கு அடிக்கோடிட்டுச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்."

(5-ம் பத்தி தொடர்ச்சி)

சுமார் ரூ. 2 கோடி சம்பள மாகக் கிடைக்கும்.

உழவர்களுக்கு எளிதாக உரம் கிடைக்கும் வகையில் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படும். உரங்களை வழங்கக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்.

நற்பணிகளுக்கு ஒப்புதல் முத்திரை குத்திடுவீர்!

"தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், 20 ஆண்டுகளாக நிலவிவந்த அரிசிப் பஞ்சத்தை—நாள் முழுவதும் 'கியூ'வில் நிற்கும் கொடுமையை மாற்ற முயன்றோம்! படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தோம்! இப்போது அரிசி தாராளமாக—ஏராளமாக—மலிவு விலையில் கிடைக்கிறது!

"புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு செய்யப்பட்டது! இயலாதாருக்கு பி.யு.சி. வகுப்பு வரை இலவசக் கல்வி தந்தோம்!

"முடைநாற்றமெடுத்திடும் கூவம் ஆற்றை சீர்திருத்த ரூ. 2 கோடி செலவில் திட்டம் தீட்டி, 5 இலட்சம் ரூபாயை இந்த ஆண்டில் சீர்திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்தவிருக்கிறோம்; அதற்குரிய துவக்கவிழாவும் நடைபெற்றது!

"காவிரி நீரை சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தைப் பற்றி முன்பிருந்த காங்கிரசு அரசிடம் கேட்டுக் கேட்டு அலுத்துப் போனோம்; ஆனால், தி. மு. கழகம் பதவியேற்றவுடன், காவிரி நீரைச் சென்னைக்குக் கொண்டுவருவதைப் பற்றி ஆராய்ந்தோம்; வீராணம் ஏரியிலிருந்து 130 மைல்கள் குழாய் மூலம் சென்னைக்குக் காவிரி நீர் கொண்டுவரும் திட்டம் தீட்டப்பட்டது; அதற்குரிய துவக்க விழாவும் வேலைகளும் துவங்கிவிட்டன; ஓரிரு ஆண்டுகளில் குடிநீர் சென்னைக்குக் கிடைத்துவிடும்.

"இப்படிப்பட்ட ஏராளமான சாதனைகளைக் காட்டி ஓட்டுக் கேட்கவில்லை! ஆனால், அந்தச் சாதனைகள், 'நல்ல காரியங்கள்; நன்மை பயக்கும் காரியங்கள்' என்று நீங்கள் ஒப்புதல் அளித்தால் உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள்!

"சில காரியங்களைச் செய்துவிட்டு ஒப்புதல் பெறுவது என்பது ஆட்சியிலுள்ள முறைகளில் ஒன்று; அதுபோல், நல்ல பல காரியங்களைச் செய்துவிட்டு, இப்போது உங்களிடம் ஒப்புதல் முத்திரை கேட்கிறோம்; நாங்கள் செய்தது நல்ல காரியம் தான் என்றால், உங்களது முத்திரையை உதயசூரியனுக்கு அளியுங்கள்!

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது சரி என்றால், உதயசூரியனுக்கு முத்திரை குத்துங்கள்! 'ரூபாய்க்குப் படி அரிசி தவறு; இரண்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடு; ஒரு மைல் நீள 'கியூ' காங்கிரசு ஆட்சியிலிருந்தால், இரண்டு மைல் நீளமல்லவா உனது ஆட்சியில் இருக்கவேண்டும்' என்று நினைத்தால், காளை மாட்டுக்கு ஓட்டளியுங்கள்!

"பஸ் கட்டணத்தைக் குறைத்தது சரி என்றால், உதயசூரியனுக்கு முத்திரையிடுங்கள்! காங்கிரசுக்காரர்களின் மத்திய அரசு செய்வதுபோல்—இரயில் கட்டணத்தை ஏற்றியது போல—செய்யவேண்டும் என்றால், காளை மாட்டுக்கு முத்திரை குத்துங்கள்!

"நல்ல காரியங்கள் செய்யத் துடிக்கும் உதயசூரியனுக்கு முத்திரை குத்தினால், அது, உற்சாக மூட்டுகிற செயலாக—உத்வேகம் ஊட்டுகிற செயலாக இருக்கும்! அந்த நற்செயலைச் செய்யும் நாள் நவம்பர் 7—மறவாதீர் உதயசூரியன்!

—மு. கருணாநிதி

(மயிலைக் கூட்டத்தில்)

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்— குறுவைப் பயிருக்குத் தண்ணீர்விட முடிவு

சென்னை, நவ. 3—

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் இந்த ஆண்டு போதிய அளவு தண்ணீர் இருப்பதால், குறுகிய கால இரண்டாம் போகப் பயிர்களுக்கு மூன்றரை மாதங்களுக்குத் தண்ணீர்விடத் தமிழக அரசு முடிவுசெய்திருக்கிறது.

'இரு போக நஞ்சை நிலங்கள்' என்று பதிவு செய்யப்படாத நிலங்களுக்கு இரண்டாம் போக வரி விதிக்கப்படும்; அணையில் தண்ணீர் கிடைப்பதைப் பொறுத்தே வினியோகம் செய்யப்படும். கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

1967-ம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலிருந்து 1968 பிப்ரவரி 18-ந் தேதிவரை கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் திறக்கப்பட்டிருக்கும். பிப்ரவரி 15-ந் தேதிக்குப் பிறகு தண்ணீர் வினியோகம் நிறுத்தப்படும்.

முதல்வர் நம்பூதிரிபாடு நிலை விளக்கம்

கள்ளிக்கோட்டை, நவ. 2—

கேரளத்தில் உணவு நெருக்கடி மிகவும் பயங்கரமான நிலையில் இருப்பதாக இன்று கேரள முதல்வர் நம்பூதிரிபாடு தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரை 1,50,000 டன் உணவுப் பொருள்களே கிடைத்திருப்பதாகவும் இந்த அளவு கடந்த ஆண்டு இதே நேரத்தில் கேரளத்திற்குக் கிடைத்த உணவுப் பொருள்களைவிடக் குறைவானது என்றும் அவர் சுட்டிக்காட்டினர். மத்திய அரசாங்கத்தின் முடிவுகளின் விளைவாகப் பற்றாக்குறை மாநிலங்களின் உணவுப் பொருள்களின் அளவுகள் குறைக்கப்படுவதும் மொத்தத்தில் வாங்கிச் சாப்பிடுபவர்கள் அதிகம் விலை கொடுக்கவேண்டியிருப்பதும்தான் என்ற கருத்தை, கடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதாக கேரள முதலமைச்சர் குறிப்பிட்டார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின் மாலை 2-மணிவரை கழகத் தோழர்கள் செல்வராஜ், வழக்கறிஞர்கள் இராமநாதன், இராமச்சந்திரன், முருகேசன், பத்மநாபன், மற்றும் பலருடன் அளவளாவினர்.

பிற்பகல் 3-மணிக்கு சிதம்பரத்தில்—என் இல்லத்தில் உணவு அருந்தினேம். பிறகு விடுதி சென்று அதிகாரிகளைக் கண்டு அவர்களுடன், கனகசபை நகரிலுள்ள விவசாய எஞ்சினியரிங் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

அதன் பிறகு கடலூர் விடுதியில் தங்கி, கடலூர் கழகத் தோழர்களுடன் பேசிவிட்டுப் புறப்பட்டார்.

பெத்துநாயகம்பேட்டை பள்ளிக்கூடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு, குறிஞ்சிப்பாடி ஒன்றியம் கொடுத்த வரவேற்பை ஏற்றுக் கொண்டார். தோழர்கள் சாம்பசிவம், எஸ். கே. சம்பந்தம் எம்.பி., என். இராசாங்கம் எம்.எல்.ஏ., கழகச் செயலாளர் நாராயணசாமி. மற்றும் பலர் உடனிருந்தனர். பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு இரவு 1-மணிக்கு மீண்டும் கடலூர் திரும்பினர்.

இப்படித் தினந்தினம்! எனக்குக் கிடைத்த தினங்கள் இரண்டு! இப்படி ஒவ்வொரு அமைச்சரும் பணிபுரிகின்றனர!

அதனால்தான் கழகத்தை, தமிழகத்தோர் கண்ணைனப் போற்றுகின்றனர்!

வேளாண்மை அமைச்சர் பணி, இப்படித் திறம்பட நடப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்—பாராட்டி நிற்கிறேன்!

ஒரிசாவில் 'குட்டி காங்கிரசு'!

கட்டாக், நவ. 3—

ஒரிசா மாநிலத்தில் புதிதாக 'குஜி காங்கிரசு' என்ற புதிய கட்சி தோன்றியுள்ளது.

'குஜி காங்கிரசு' என்றால், 'குட்டிக் காங்கிரசு' என்று பொருளாகும்.

இராதா மோகன் தாஸ் தலைமையில் தாழ்த்தப்பட்டோர் வகுப்பினர், இப்புதிய கட்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

ஒரிசா அரசின் அதிகாரத்தை இவர்கள் எதிர்க்கிறார்கள்; அதன் காரணமாகவே இவர்கள், தனியாக ஒரு கட்சி ஆரம்பித்திருக்கிறார்கள்.

இவர்கள் ஏற்கனவே தனியாக ஓர் போட்டி 'அரசு'ம் அமைத்திருக்கிறார்கள்; இந்த நிறுவனம், சட்டம்—ஒழுங்கினை சீர்குலைத்து வந்திருக்கிறது. அண்மையில் இந்த நிறுவனத்தைப் போலீசார் கண்டுபிடித்தனர். இந்த நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், சில போலீசுக்காரர்களையும் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள்!

அரசினர் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்தனர். தலைவர் இராதா மோகன் தாஸ், மற்றும் 50 உறுப்பினர்களைப் போலீசார் கைது செய்து பொறுப்பில் விடுவித்தனர்.

அசாம் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துவந்த இராதா மோகன் தாஸ், ஒரிசாவுக்கு வந்து இப்புதிய கட்சியை ஆரம்பித்தார். இப்புதிய கட்சியினர், 'ஜகநாதசமய முறை'யைப் பிரசாரம் செய்கிறார்கள். வேதங்களில் நம்பிக்கை கிடையாது என்றும், ஒரிசாவின் பரம்பரை ஆட்சியாளர்கள் என்றும், மீண்டும் ஒரிசாவில் ஆட்சியை ஏற்படுத்தப்புவதாகவும் சொல்லிவருகிறார்கள்.

வடக்கே உருவாகும் மாபெரும் உரத் தொழிற்சாலை

ரூ. 62 கோடி செலவு—அந்நிய உதவியும் கிடைக்கிறது

பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவியுடன் இந்தியா உருவாக்கியுள்ள மாபெரும் உர உற்பத்தித் திட்டம், கான்பூருக்கு அருகிலுள்ள 276 ஏக்கர் பரப்பில் மிக வேகமாக உருவாகி வருகிறது.

இத்திட்டத்திற்கு ரூ. 62 கோடி செலவாகும்; அது, 1969 கடைசிக்குள் இயங்கவிருக்கிறது. அங்கு ஆண்டுதோறும் ரூ. 32 கோடி மதிப்புள்ள 4¾ இலட்சம் டன் யூரியா உரம் தயாராகும்.

அத்தொழிற்சாலைக்கு ஆண்டுதோறும் இந்திய எண்ணெய்க் கழகத்தைச் சேர்ந்த பரௌனி சுத்திகரிப்பாலையிலிருந்து முக்கிய மூலப் பொருளான நாப்தாவில் 2½ இலட்ச மெட்ரிக் டன்னை அளிக்க இந்திய அரசு ஒப்பியுள்ளது.

இத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் யூரியாவினால், உணவுத் தானியங்களில் மேலும் 20 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாக விளையும். மேலும் 5,000 தொழிலாளருக்கு வேலை கிடைக்கும்; ஆண்டுதோறும்

(2-ம் பத்தி பார்க்க)

'மதிக்க'த் தெரிந்தவர்கள் 'திணிக்க' முயலுவார்களா?

விரும்பாதவர்களை வற்புறுத்தினுல் விபரீதம்தான் விளையும்!

அன்று தமிழன் சொன்ன சொல் இன்றும் மறைந்துவிடவில்லை!

வேற்றுமையில் ஒற்றுமை காணும் தனிச் சிறப்பு— முதலமைச்சர் அண்ணு அறிவுரை

சென்னை, நவ. 4—

"வேற்றுமையில் ஒற்றுமைதான் இந்தியாவின் தனிச் சிறப்பு. ஒவ்வொருவரும் மற்றவருடைய கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் மதிக்க வேண்டும்.

"ஒரு பிரிவினரின் கலாச்சாரம் அல்லது பழக்கவழக்கங்களை மற்றவர்கள் மீது திணிக்க முற்படுவதால்தான் பூசல்களும், சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

"விரும்பாத தமிழர் மீது இந்தியைத் திணிப்பதை இதற்கு ஒரு உதாரணமாகச் சொல்லலாம் ; 'இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டுமானல், இந்தி படித்துத்தான் தீர வேண்டும்' என்று வற்புறுத்தினுல், 'அதையும் பார்த்துவிடுவோமே' என்றுதான் கூறுவோம். இந்தியின்மீது நமக்கு வெறுப்புக் கிடையாது ; இதற்கு முன்பு 'தமிழ்—இந்தி போதினி' புத்தகம் பலருடைய இல்லங்களில் காணப்பட்டன ; ஆனுல், 'இந்தியைக் கட்டாயம் படித்தே தீரவேண்டும்' என்று எப்போது அவர்கள் கூறினார்களோ, அன்றே அந்தப் புத்தகங்கள் மறைந்துவிட்டன; நோக்கங்கள் நிறைவேறுமல் போய்விட்டன!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், தியாகராயநகரில் இராஜஸ்தானி சங்கத் துவக்கவிழாவில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கினர்.

தமிழர்கள் எப்பொழுதுமே பரந்த நோக்கம் படைத்தவர்கள்! மற்ற கலாச்சாரங்களையும், பழக்கவழக்கங்களையும் மதித்து வந்திருப்பவர்கள்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று 2,000 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னவன் தமிழன்; எனவே, அன்று சொன்ன அந்தச் சொல் மடிந்து போகாது !

பிறகு எவரையுமே பகைத்துக் கொள்ளமாட்டார்கள் !

கடமையிலிருந்து தவறமாட்டேன்!

சிவசேனை இயக்கத்தின் எதிரொலியாக இங்கும் ஏதும் துவங்க இடமில்லை ; எவராயினும், அவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் என்னுடைய கடமைப் பொறுப்பிலிருந்து இம்மியும் பிறழமாட்டேன் !"

'வீர வாள்' பரிசு

"தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில் எழும்பூர் தொகுதியிலுள்ள எந்த வட்டம் அதிகமான வாக்குகளை தி. மு. கழகத்துக்குச் சேகரித்துத் தருகிறதோ அந்த வட்டத்திற்கு, மதுரை மாவட்டச் சார்பில் 'வீர வாள்' ஒன்று புரட்சி நடிகர் எம் ஜி.ஆர். அவர்களால் அளிக்கப்படவிருக்கிறது"

என்று மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிருர்.

'கேடயம்' பரிசு!

"தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில், சைதைத் தொகுதியில் எந்த வட்டம் அதிகமான வாக்குகளைச் சேகரித்துத் தருகிறதோ அந்த வட்டத்திற்கு திருச்சி மாவட்டச் சார்பில் கேடயம் ஒன்று, கலைஞர் மு. கருணநிதி அவர்களால் அளிக்கப்படவிருக்கிறது"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தருமலிங்கம் அறிவிக்கிருர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5—11—67

திண்டுக்கல்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு போடிநாயக்கன்பட்டியில் ; தலைவர் : அ. தங்கவேலு ; பேசுவோர் : ஏ. எம். இராசா எம்.ஏ.,எம்.எல்.ஏ., கே. ஆர். பி. மணிமொழியன்.

6—11—67

ஓமலூர்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு ஈசுவரன் கோயில் திடலில் ; தலைவர் : பி. குலாப்கான் ; பேசுவோர் : ஆர். எஸ். மணி எம்.ஏ.பி.டி.,பி.எல்., கே. ஆர். கோவிந்தன் பி.ஏ. பி.எல்.,எம்.எல்.ஏ., சி. பழனி எம்.எல்.ஏ., எம். எஸ். பொன்னுசாமி, சின்னு, கே. பி. சௌந்தரராசன், நா. ஆதி, அகமது, எஸ். ஆர். அர்த்தநாரி. [குமாரி விசயா குழுவினரின் 'ஆளுகின்ருர் அண்ணு' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.]

தமிழ் நாடு

டாக்சி — ஆட்டோ தொழிலாளர் சங்கம்

முரசொலி மாறனுக்கு ஆதரவு

தென் சென்னை நாடாளுமன்ற இடைத்தேர்தலில், தி. மு. கழக வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை ஆதரித்து தமிழ்நாடு டாக்சி—ஆட்டோ தொழிலாளர் சங்கத் தோழர்கள், 5-11-67 காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணிவரையில், தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் முக்கிய வீதிகளில், காரில் ஒலிபெருக்கி அமைத்துப் பிரசாரம் செய்வார்கள்.

சங்கத் தலைவர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களும் கலந்து கொள்வார்.

தென் சென்னை

அணிகல தொழிலாளர் பெருமக்களுக்கு வேண்டுகோள்

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் முரசொலி மாறன் எம்.ஏ. அவர்களுக்கே வாக்களித்து ஆதரவு தருமாறு தென் சென்னைவாழ் அணிகலத் தொழிலாளர் சமூகப் பெருமக்களை நகைத் தொழிலாளர் முன்னேற்ற நலக் குழுச் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

"அணிகலத் தொழிலாளர் சமூகம் என்றும் மறக்கமுடியாதவர் திரு. முரசொலி மாறன் எம்.ஏ. அவர்களாவார் ; அணிகலத் தொழிலாளர் துன்பம் துடைக்க எடுத்துக்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் எவ்வித வேறுபாடுமின்றி அரசுக்கு எடுத்துரைத்து, அதனை நீக்குவது எப்படி என்பது பற்றி ஆணித்தரமாக எழுதி, உதவி செய்துவரும் முரசொலி மாறன், வெற்றிவாகை சூடச் செய்வதற்கு அணிகலத் தொழிலாளர் சமூகம் தவருது என்பதை நாட்டவருக்குத் தெரிவிக்கும் நாளாக நவம்பர் 7 அமைந்திருக்கிறது ; அந்த நாளில், உதயசூரியன் சின்னத்துக்கே தங்கள் வாக்குகளை அளிக்குமாறு வேண்டுகின்ரேம்" என கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பரந்த மனேபாவம் பரவுவது அவசியம்!

'சிவசேனைக்குப் போட்டியாக—வடநாட்டவருக்கு எதிராகத் தமிழகத்தில் ஏதாவது இயக்கம் கிளம்பலாம்' என்று நிலவும் அச்சத்தைக் குறிப்பிட்டு முதலமைச்சர் கூறியதாவது :—

"பம்பாயில், பொறுப்பற்ற சிலர் கூடிக்கொண்டு சிவசேனை இயக்கத்தை ஆரம்பித்திருக்கிருர்கள்; 'மகாராட்டிரம் மகாராட்டியருக்கே' என்ற இந்த இயக்கமானது, தென்னிந்தியரை மட்டுமன்றி, இராஜஸ்தானிகள் போன்றவர்கள் அனைவரையுமே எதிர்க்கிறது ! மத்திய அரசிலும், மகாராட்டிரத்திலும் உள்ள தலைவர்களே இந்த இயக்கத்தைக் கண்டித்திருக்கிருர்கள் ! சிவசேனையின் செல்வாக்கு மங்கிவருகிறது !

ஒரு கலாச்சாரம் மற்ற கலாச்சாரங்களுக்கு நடுவில் நிலைத்து வளர வேண்டுமானல், ஒத்த மதிப்பும், பரந்த மனேபாவமும் வேண்டும்.

ஒரு நாடாக இந்தியா உருவாகியுள்ளதா?

நான் 'தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதி' என்று ஒரு பிரசாரம் நடந்தது ; அவர்களுக்குச் சொல்கிறேன்—நான் தேசிய ஒருமைப்பாட்டை முழுவதுமாக ஆதரிக்கிறேன். ஆனுல், 'இந்திய நாடு ஒரு நாடாகத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்' என்று முறையிட்டு கூவுகின்றேன் ! இந்த இலட்சியத்தை அடைய குறைந்த பட்சம் 10 ஆண்டுகளாவது ஆகும் !

"நாம் ஏற்கனவே ஒரு நாடாகி விட்டிருந்தால், தேசிய ஒருமைப்பாடு தினங்கள் ஏன் கொண்டாடப்பட வேண்டும்? உறுதி மொழிகள் ஏற்கப்பட வேண்டும்?

நாம் அடிப்படையில் ஒற்றுமை காண முயலவேண்டும். இந்தியா பல்வேறு கலாச்சாரங்கள் படைத்த நாடு. ஒவ்வொரு கலாச்சாரமும் மற்றதில் உள்ள சிறப்பு அம்சங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள், தாங்கள் தமிழர்கள் என்பதை உணர்ந்துவிட்டால்,

★ 'இந்தியை நாம் ஏற்கவில்லை' என்பதை டில்லிக்கு மீண்டும் உணர்த்திட—

★ 'காங்கிரசுக் கட்சியைத் தமிழகம் கைகழுவிவிட்டது' என்பதை உறுதிப்படுத்த—

★ 'கழக ஆட்சியின் சாதனைகளை நாடு வரவேற்கிறது' என்பதை மெய்ப்பிக்க—

★ 'எதிர்க் கட்சியினரின் வெற்றுக் கூச்சலுக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை' என்பதை எடுத்துக்காட்ட—

★ 'அறிஞர் அண்ணுவின் ஆட்சி நீடிக்க வேண்டும்' என்ற பெருவிருப்பைத் தெரிவிக்க—

வந்திருக்கிறது ஒரு நல்வாய்ப்பு!



அதுதான்

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தல் : 7—11—67

★

தி. மு. கழக வேட்பாளர்

முரசொலி மாறன்

வாகை சூட

உதயசூரியன் சின்னத்தில்

முத்திரையிட்டு

உங்கள் உயிரினும் மேலான வாக்கினை

வழங்குவீர் !



30,000 ஏக்கரில் பயிர்கள் பாதிப்பு!

அறுவடை செய்யும் வயல்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன

தஞ்சை, நவ. 3—

தஞ்சை மாவட்டம் முழுதும் பலத்த மழை பெய்துள்ளது. இந்த மழை காரணமாக அறுவடை செய்யவேண்டிய வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

பாபநாசம் வட்டத்தில் 10,000 ஏக்கர் நிலங்களும், தஞ்சை வட்டத்தில் 20,000 ஏக்கர் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

வயல்களில் தண்ணீர் விரைவாக வடியாவிட்டால் பயிர்கள் நாசமாகிவிடும் என்று அஞ்சப்படுகிறது.

மேட்டூர் அணையில் இன்றைய நீர் மட்டம் 69.35 அடி, மழை நீர் கொள்ளிடத்தில் விடப்படுகிறது.

மறைவு

சென்னை, நவ. 4—

சென்னை 14-வது வட்டம் துறைமுகப் பகுதி தி.மு. கழக உறுப்பினரும் ஆர்வமிக்க பணியாளருமான டி. மாசிலாமணி, இன்று விடியற் காலை 3 மணியளவில் இயற்கையெய்திய செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் வட்டச் செயலாளர் சி. தர்மலிங்கம் அறிவித்துக் கொள்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவி அச்சகத்தில் (24, [illegible] [illegible] தெரு, சென்னை-[illegible]) [illegible]